மருந்து ஆலையில் கொதிகலன் வெடித்து 4 பேர் உயிரிழப்பு

15 பேர் காயம்

கும்மிடிப்பூண்டி, அக். 3: திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி அருகே ஆந்திர எல்லையில் உள்ள தனியார் மருந்து தொழிற்சாலையில் சனிக்கிழமை கொதிகலன் வெடித்ததில் தமிழகத்தைச் சேர்ந்த இருவர் உள்பட 4 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த ஆரம்பாக்கம் அருகே ஆந்திர மாநில எல்லைக்குட்பட்ட செருவி என்ற இடத்தில் ஸ்ரீ சிட்டி சிறப்பு பொருளாதார மண்டலத்தில் தனியார் மருந்து தயாரிக்கும் தொழிற்சாலை அமைந்துள்ளது. இங்கு கொதிகலன் பகுதியில் சுமார் 30 பேர் முன்னிரவு முதல் வேலை பார்த்தனர். சனிக்கிழமை அதிகாலை, அதிக அழுத்தம் மற்றும் கொதிநிலை காரணமாக கொதிகலன் வெடித்துச் சிதறியது.

இந்த விபத்தில் தமிழகப் பகுதிகளான எகுமதுரை ஊராட்சி நாயுடுகுப்பத்தைச் சேர்ந்த பாஸ்கர் மகன் மோகன் (20), மாதர்பாக்கத்தை சேர்ந்த நடராஜன் மகன் ரமேஷ்(50) மற்றும் ஆந்திர மாநிலம், தடாவைச் சேர்ந்த சின்னமஸ்தான், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த

ரமேஷ்

மோகன்

சௌர்ராய் ஆகிய 4 தொழிலாளர்கள் நிகழ்விடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 15-க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். விபத்து குறித்து தகவலறிந்த ஆந்திர மாநில அதிகாரிகள், போலீஸார் மற்றும் தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர்.

பலத்த காயம் அடைந்தவர்கள் தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்து தொடர்பாக ஆந்திர மாநில எல்லையில் உள்ள சத்தியவேடு காவல் நிலைய போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மருந்து தொழிற்சாலையில் கொதிகலன் வெடித்து விபத்து ஏற்பட்ட பகுதி.

‘ஜெம்’ வீரமணி மீது மேலும் ஒரு போக்ஸோ வழக்கு

சென்னை, அக். 3: சிறுமிகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள ‘ஜெம்’ வீரமணி மீது மேலும் ஒரு போக்ஸோ பதிவு செய்யப்பட்டது.

சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்ததாக ‘ஜெம் கிரானைட்’ நிறுவன உரிமையாளர் வீரமணி, அவரது உதவியாளர் சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்ஹன், மற்றொரு உதவியாளர் கணேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார். இந்த வழக்கு தொடர்பாக அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக் குழுவில் (எஸ்ஐடி) வரப்பெற்ற புகார்களின் பேரில் ‘ஜெம்’ வீரமணி மீது வெள்ளிக்கிழமை வரை 4 போக்ஸோ வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இந்த நிலையில், சென்னையைச் சேர்ந்த பெண் ஒருவர் அளித்த புகாரின் அடிப்படையில், மேலும் ஒரு வழக்கை சிறப்பு புலனாய்வுக் குழு சனிக்கிழமை பதிவு செய்தது.

வாட்ஸ் ஆப் மூலம் புகார்: இதற்கிடையே, திருவண்ணாமலையைச் சேர்ந்த மற்றொரு பெண், சிறப்பு புலனாய்வுக் குழுவை வாட்ஸ்ஆப் மூலம் தொடர்புகொண்டு புகார் அளித்துள்ளார். சிறுமியாக இருந்தபோது வேலை தேடி சென்னை வந்த தனக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஜெம் வீரமணி பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக அந்தப் பெண் புகாரில் தெரிவித்துள்ளார்.

காத்திருப்போர் பட்டியலில் காவல் ஆய்வாளர்

கடந்த 2025-ஆம் ஆண்டு ஜெம் வீரமணி சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்தது தொடர்பாக சென்னை பெருநகர காவல் துறையில் புகார் செய்யப்பட்டது. புகாருடன், வீரமணி சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த காட்சி அடங்கிய பென்டிரைவ் போலீஸாரிடம் வழங்கப்பட்டது. இந்த புகாரின் அடிப்படையில் சென்னை காவல் துறையின் பாலியல் தொழில் தடுப்புப் பிரிவு வழக்குப் பதிவு செய்தது. ஆனால் அதன் பின்னர், விடியோவில் இருக்கும் நபர் யாரென்று தெரியவில்லை என்று அந்த வழக்கை முடித்து வைப்பதற்கான அறிக்கையை போக்ஸோ நீதிமன்றத்தில் அந்தப் பிரிவு சமர்ப்பித்தது.

நீதிமன்றம் அதை ஏற்க மறுத்து, தடயவியல் துறைக்கு அந்த விடியோவை அனுப்பி, சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்யும் நபரைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டது. இதன் பின்னர், அந்த வழக்கில் விசாரணை கிடப்பில் போடப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தில், அந்த வழக்கை விசாரணை செய்த அப்போதைய பாலியல் வன்கொடுமை தடுப்பு பிரிவு ஆய்வாளர் சி.மகேஷ்குமார் மீது பல்வேறு புகார்கள் கூறப்பட்டன. இந்நிலையில், தற்போது மீனம்பாக்கம் குற்றப்பிரிவு ஆய்வாளராக உள்ள மகேஷ்குமாரை, காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி காவல் ஆணையர் ஏ.அமல்ராஜ் சனிக்கிழமை உத்தரவிட்டார்.

இது தொடர்பாக சிறப்பு புலனாய்வுக் குழுவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். ஏற்கெனவே ஜெம் வீரமணி, சாந்தி, மகேந்திர சிம்ஹன் ஆகியோர் மீது இரு நாள்களுக்கு முன்பு குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காவல் ஆணையரிடம் தவெக மனு: இந்த விவகாரம் தொடர்பாக தவெக சார்பில் சென்னை காவல் ஆணையர் ஏ.அமல்ராஜிடம் சனிக்கிழமை புகார் மனு அளிக்கப்பட்டது. அதில், ஜெம் வீரமணி சிறுமிகளை பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட விவகாரம் எழுந்தபோது, தமிழகத்தில் திமுக ஆட்சி செய்து கொண்டிருந்தது. அப்போது உரிய நடவடிக்கை எடுக்காமல், இந்த விவகாரத்தை மூடி மறைத்துவிட்டனர். எனவே, இந்த விவகாரம் தொடர்பாக, முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின், முன்னாள் சட்டத் துறை அமைச்சர் ரகுபதி உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்த வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

யுபிஐ மூலம் வாக்காளர்களுக்கு தவெக பண விநியோகம்

திருப்பூர், அக்.3: தாராபுரம் இடைத்தேர்தலில் கூகுள்பே போன்ற யுபிஐ செயலிகள் மூலம் வாக்காளர்களுக்கு தவெகவினர் பண விநியோகம் செய்வதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பாக தாராபுரத்தில் செய்தியாளர்களிடம் அவர் சனிக்கிழமை கூறியதாவது:

தாராபுரத்தில் தவெகவினர் வாக்காளர்களுக்கு ‘கூகுள்பே’ மூலம் பணம் வழங்கி வருகின்றனர். கிராமங்களில் அனைத்து அமைச்சர்களும் முகாமிட்டுள்ளனர். பேரவை பொதுத் தேர்தலில் அதிக அளவில் தொகுதிக்குச் செல்லாத தவெகவினர் தற்போது 2 தொகுதிகளுக்கும் அதிக நேரம் செலவிடுகின்றனர்.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டால் வங்கிக் கணக்கில் இருந்து அதிக அளவில் பணம் எடுக்க முடியாது. ஆனால், தற்போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்களில் பணம் கோடிக்கணக்கில் புழங்குகிறது.

இடைத்தேர்தலில் அரசியல் பேச வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஆனால், மற்ற கட்சிகள் கூகுள்பேயில் பணம் போடுவது குறித்து குறிப்பு எடுக்கின்றனர்.

தேர்தல் ஆணையம் தூங்குகிறது. எப்படி இவ்வளவு பணம் பதுக்கப்பட்டுள்ளது? அக்கட்சிகள் எப்படி வெளியே கொண்டு வந்துள்ளன என தெளிவுபடுத்த வேண்டும்.

அரிசி, பருப்பு என அனைத்து அத்தியாவசிய பொருள்களின் விலையும் உயர்ந்து விட்டது. இது குறித்து எதிர்முகாம்களில் பேசவில்லை. முதல்வரே அரசியலுக்கு அப்பால்தான் பேசுகிறார். உருவ கேலி செய்வது ஏற்கத்தக்கது அல்ல என்றார்.

வாக்குக்காக ஒரு ரூபாய்கூட தவெக வழங்கவில்லை

கோவை, அக். 3: ‘தவெக வாக்குக்காக ஒரு ரூபாய் கூட வழங்கியதில்லை; அந்தப் பழக்கமும் எங்கள் கட்சிக்கு இல்லை’ என்று மின்சாரத் துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார் கூறினார்.

இது தொடர்பாக அவர் கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் சனிக்கிழமை கூறியதாவது: தாராபுரம் பிரசாரத்தில் பேசிய முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின், தவெக வேட்பாளர் சத்தியபாமாவை தரக்குறைவாகவும், உருவகேலி செய்யும் வகையிலும் பேசியுள்ளார். இதற்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும். இது தொடர்பாக, அவர் மீது தேர்தல் ஆணையத்திலும் புகார் அளிக்கப்பட்டுள்ளது. விரக்தியின் உச்சத்தில் உள்ள திமுகவினருக்கு மீண்டும் தோல்விதான் கிடைக்கும்.

தவெக எப்போதும் வாக்குக்காக ஒரு ரூபாய் கூட கொடுத்ததில்லை. அந்தப் பழக்கம் எங்கள் கட்சிக்கு இல்லை. அப்படிப் பணம் கொடுப்பதாகக் கூறியவர்கள் அதை நிரூபிக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு (எஸ்.ஐ.ஆர்.) எதிராக தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்திய ஒரே கட்சி தவெகதான். மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல்களில் தவெக வேட்பாளர்கள் மிகப்பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவர். திமுக, அதிமுக வேட்பாளர்கள் வைப்புத்தொகை இழப்பார்கள். இனி வரும் காலங்களில் திமுக, அதிமுக, பாஜக ஆகிய கட்சிகள் வைப்புத்தொகை வாங்குவதற்காக தேர்தலில் இணைந்து போட்டியிடும் சூழல் வரும்.

‘மின் விநியோகம் விரைவில் சீராகும்’: தமிழகத்தில் மின் விநியோகம் தொடர்பாக, சிறுசிறு பிரச்னைகள் வந்தாலும், அவற்றை உடனடியாகச் சரி செய்து வருகிறோம். கூடிய விரைவில் மின் விநியோகம் சீராகும் என்றார்.

கவின் கொலை வழக்கு: அரசு மேல்முறையீடு செய்யும்

அமைச்சர் வன்னிஅரசு

தூத்துக்குடி/ஸ்ரீவைகுண்டம், அக். 3: கவின் கொலை வழக்கில், சுர்ஜித்தின் தந்தை, தாய் விடுவிக்கப்பட்டுள்ளதற்கு எதிராக தமிழக அரசு மேல்முறையீடு செய்யும் என்று சமூக நீதித் துறை அமைச்சர் வன்னிஅரசு கூறினார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் சனிக்கிழமை கூறியதாவது:

கவின் கொலை வழக்கிலிருந்து சுர்ஜித்தின் தந்தை-தாய் விடுவிக்கப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. அரசு எதிர்ப்பு தெரிவித்து மேல்முறையீடு செய்வதற்கு அனைத்து வேலையையும் செய்து கொண்டிருக்கிறது.

பொதுவெளியில் பெண்கள் பற்றி உருவ கேலி செய்யக் கூடாது என்பதற்கு 1998 இல் சட்டம் இயற்றியவர் அப்போதைய முதல்வர் கருணாநிதி. அந்தச் சட்டத்தை மதிக்க வேண்டும்; நாங்களும் மதித்து வருகிறோம். சமூகநீதி, சமத்துவம் கொள்கை அடங்கிய திமுக போன்ற பேரியக்கம் இது மாதிரி உருவகேலி செய்யக்கூடாது என்றார்.

சுர்ஜித்தின் தந்தை, தாய் விடுவிக்கப்பட்டுள்ளதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யக் கோரி கவினின் பெற்றோர் சந்திரசேகர்- தமிழ்ச்செல்வி ஆகியோர் கடந்த 3 நாள்களாக காத்திருப்பு போராட்டம் நடத்தினர். அவர்களை அமைச்சர் வன்னிஅரசு சனிக்கிழமை சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து போராட்டம் வாபஸ் பெறப்பட்டது.

இலங்கை கடற்படையினரால் ராமேசுவரம் மீனவர்கள் 9 பேர் கைது

ராமேசுவரம், அக். 3: ராமேசுவரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 9 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சனிக்கிழமை கைது செய்தனர். மேலும், அவர்களது விசைப் படகையும் பறிமுதல் செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் துறைமுகத்திலிருந்து 399 விசைப் படகுகளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் சனிக்கிழமை மீன்வளத் துறை அனுமதி பெற்று கடலுக்குள் மீன் பிடிக்கச் சென்றனர். இவர்கள் கச்சத்தீவு-நெடுந்தீவுக்கு இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த புரோகர் என்பவரது விசைப் படகை சிறைப்பிடித்தனர்.

மேலும், அந்தப் படகிலிருந்த 9 மீனவர்களை கைது செய்து நெடுந்தீவு கடற்படை முகாமுக்கு கொண்டு சென்றனர். மேலும், அவர்களது விசைப் படகையும் பறிமுதல் செய்தனர்.

மாண்புமிகு கடன் மீட்பு தீர்ப்பாயம் - III, சென்னை முன்னிலையில்
வேது தளம், கூடுதல் அலுவலக கட்டிடம், சாஸ்திரி பவன், ஹாடோஸ் ரோடு, நுங்கம்பாக்கம், சென்னை - 600 006.

O.A. எண்.356/2025

இந்தியன் வங்கி, (IFSC Code : IDIB000S004) சைதாப்பேட்டை கிளை, பிரதிநிதியாக இதன் உதவி பொது மேலாளர், திரு. P. சுப்ரமணி, எண்.1, அப்துல் ரசாக் தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. ...விண்ணப்பதாரர்

-எதிரிடை-

(1) **M/s. அருண் ஏஜென்சீஸ் [PAN எண். ANSPM7141E] பிரதிநிதியாக இதன் உரிமையாளர், திரு. A. முருகன்,** எண்.1, ராமலிங்கம் மெயின் ரோடு, சிவபிரகாசம் நகர், புழுதிவாக்கம், சென்னை - 600 091.

(2) **திரு. A. முருகன்,** எண்.3/171, SSS என்க்ளேவ், கோவிந்தசாமி நகர், 2வது தெரு, மடிப்பாக்கம், சென்னை - 600 091.

மற்றும் மேலும் இருப்பது : எண்.7, மதனகோயில் தெற்கு தெரு, கிளாக்குளம், வீரவநல்லூர், திருநெல்வேலி - 627 426.

(3) **திருமதி. A. கோமதி,** எண்.3/171, SSS என்க்ளேவ், கோவிந்தசாமி நகர், 2வது தெரு, மடிப்பாக்கம், சென்னை - 600 091.

மற்றும் மேலும் இருப்பது : எண்.7, மதனகோயில் தெற்கு தெரு, கிளாக்குளம், வீரவநல்லூர், திருநெல்வேலி - 627 426. ...பிரதிவாதிகள்

பிரதிவாதிகளுக்கு பத்திரிக்கை பிரசுரம்

பிரதிவாதிகளிடமிருந்து **ரூ.10,35,42,093/-** தொகையை மீட்பதற்காக மேற்கண்ட அசல் விண்ணப்பம் விண்ணப்பதார வங்கியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த OA 356/2025 என எண்ணிடப்பட்டுள்ளது. பிரதிவாதிகளுக்கான அழைப்பாணைகள் திரும்ப வந்துவிட்டது. எனவே, இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் கற்றறிந்த பதிவாளர் விண்ணப்பதார வங்கிக்கு மாற்றுமுறை சேவை எடுத்து 28.10.2026 அன்று ஆஜராக பத்திரிக்கை பிரசுரம் வெளியீடு செய்ய உத்தரவிட்டுள்ளார். எனவே, பிரதிவாதிகள் இந்த மாண்புமிகு தீர்ப்பாயத்தின் முன்னிலையில் நேரிடையாக அல்லது வழக்கறிஞர் மூலமாக 28.10.2026 அன்று ஆஜராகவும். அல்லாது தவறினால் எந்த மேல் அறிவிப்பும் இன்றி நீங்கள் இல்லாத நிலையிலும் வழக்கு விசாரிக்கப்பட்டு சட்டப்படி முடிவு செய்யப்படும்.

M/s. P.V. முரளிதர், P.M. சுரேந்தர்,
மொபைல் எண்.9840165259, விண்ணப்பதாரரின் வழக்கறிஞர்

SBI பாரத ஸ்டேட் வங்கி
ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை- II
எண். 44, முதல் தளம், எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. மின்னஞ்சல் முகவரி: sbi.70674@sbi.co.in

அதிகாரபூர்வ அலுவலர் விவரங்கள்: பெயர்: திரு. கைலாஷ் சந்திர மீனா, போன் : 044-24338112 / 8699009584

தொடர்புக்கு: நகர வழக்கு அலுவலர் : பெயர்: திரு. S. மதியழகன் – மொபைல் : 6381445907

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு. (8(6) விதியை காண்க)

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் 8(6) ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் கீழே விரிவாக விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அதிகாரப்பூர்வ அதிகாரி, பாரத ஸ்டேட் வங்கி, அவர்களால் **கீழ்குறிப்பிட்டுள்ள சுவாதீனத்தில்** எடுத்துக்கொள்ளப்பட்டது. **சென்னை பாரத ஸ்டேட் வங்கி, SARB-II கிளைக்கு** கீழே விவரிக்கப்பட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய பாக்கித்தொகையினை வசூலிக்கும் பொருட்டும் சொத்தானது "உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு" மற்றும் "என்ன உள்ளதோ அப்படியே" எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள தேதியில் விற்பனை செய்யப்படவிருக்கிறது.

வ.எண்.1: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: திரு. அரவிந்த். S, த/பெ. திரு. சேகர், குடியிருப்பு முகவரி: 10/31A, கரணை கார்டன் பிரதான தெரு, சைதாப்பேட்டை, சென்னை -600015. அலுவலகத்தின் முகவரி: Hsenid Business Solutions Pvt Ltd, Nelson Towers, அமைந்த கரை, சென்னை – 600029. சொத்தின் முகவரி: ஃப்ளாட் எண். A-4, முதல் தளம், மறைமலை நகர், திருக்கச்சூர் கிராமம், செங்கல்பட்டு வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை - 603 204

நிலுவைத் தொகை: 01.10.2026 அன்றுள்ளபடி ரூ. 74,69,723.00 (ரூபாய் எழுபத்து நான்கு இலட்சத்து அறுபத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று இருபத்து மூன்று மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, இதர, கட்டணங்கள், மற்றும் செலவினங்கள் உட்பட.

அசையா சொத்தின் விளக்கம்

மூல ஆவணதாரர் பெயர்: திரு. அரவிந்த் சேகர் (12.04.2019 தேதியிட்ட விற்பனை ஆவண எண் 4217/2019 இன்கீழ் அடங்கியது) அட்டவணை – 'A' சொத்து (அசையாச் சொத்துக்களின் விளக்கம்) செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு SRO இணை-II சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், **திருக்கச்சூர் கிராமம்,** பழைய சர்வே எண் 526A/1C, பட்டா எண் 2440 இன்படி புதிய சர்வே எண் 526A/1C2 இல் அடங்கிய (மறைமலை நகர் நகராட்சி வழங்கிய 27.05.2015 தேதியிட்ட திட்ட அனுமதி மற்றும் கட்டிடத் திட்ட அங்கீகாரம் B. A. எண் 213/2015 & D.Dis எண் 2123/14/A1 & செங்கல்பட்டு, நகரத் திட்ட ஆணையம் வழங்கிய 10.10.2014 தேதியிட்ட அங்கீகார எண் 3421/14) 13952சதுர அடி விஸ்தீரணங்கொண்ட காலி நிலம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, **எல்லைகள்:** வடக்கில்: சர்வே எண் 526A/ 1A1பகுதி, 526 A/13 முதல் 16 பகுதி வரை & தற்போதுள்ள சாலை, தெற்கில்: சர்வே எண் 526 / A1D, கிழக்கில்: சர்வே எண் 526A/12 பகுதி மற்றும் 526 A/18பகுதி & தற்போதுள்ள சாலை, மேற்கில்: சர்வே எண் 526 A/1C அட்டவணை – 'B' சொத்து (இதன் மூலம் தெரிவிக்கப்பட்டச் சொத்து) மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட அட்டவணை 'A' இன் சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 463சதுர அடி நிலம். அட்டவணை – 'C' சொத்து (பொதுப்பரப்பு உட்பட) தரை தளத்தில் A-4 என்று குறிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒரு கார் நிறுத்தும் இடம் அதனுடன் முதல் தளத்தில் 1216சதுர அடி சூப்பர் கட்டிடப்பரப்பு கொண்ட ஃப்ளாட் எண் A-4.

சுவாதீன நிலை: மெய்நிலை

குறைந்தபட்சகேட்பு விலை	டேவணித்தொகை	ஏல உயர்வுத்தொகை
₹ 35,00,000/-	₹ 3,50,000/-	₹ 25,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 17.10.2026 நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை.

மின் ஏலத் தேதி & நேரம்: **29.10.2026** நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

வ.எண்.2: கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: திரு. ராஜகுமார் M (கடன்தாரர்) மற்றும் திருமதி. சுமதி. R (இணை கடன்தாரர்) குடியிருப்பு முகவரி 1: பிளாட் F1, LSS MVJ Castle, எண்.48, வால்டேர் தேவராஜ் தெரு, தேவராஜ் நகர், மாடம்பாக்கம், சென்னை 600126. குடியிருப்பு முகவரி 2: 89/37 டபீர் கிழக்கு தெரு, பாலக்கரை அருகில், கும்பகோணம் 612 001. சொத்து முகவரி: பிளாட் F1, முதல் தளம், VGK Ishani, P.No 55A & 55B, Apn நகர், சேலையூர் (கிழக்கு தாம்பரம்), சென்னை 600 073. அலுவலக முகவரி: திரு. ராஜகுமார் M (கடன்தாரர்) Panvo Organics Ltd., 61, சின்ன ஒபுளாபுரம் கிராமம், S.R.கண்டிகை சாலை, கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் 601201.

நிலுவைத் தொகை: 01.10.2026 அன்றுள்ளபடி ரூ. 36,82,350.00 (ரூபாய் முப்பத்து ஆறு இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து முன்னூற்று ஐம்பது மட்டும்) மேலும் எதிர்கால வட்டி, இதர, கட்டணங்கள், மற்றும் செலவினங்கள் உட்பட.

அசையா சொத்தின் விளக்கம்

மூல ஆவணதாரர் பெயர்: திரு. இராஜகுமார். M & திருமதி. சுமதி.R (விற்பனை ஆவண எண்.427/2019 இன் கீழ் அடங்கியது) அட்டவணை சொத்து (மொத்த சொத்து) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் வட்டம், எண்.33, சேலையூர் கிராமம் சர்வே எண்.381/1, தாம்பரம் சர்வே நிலப்பதிவேடு நகல் இன்படி பழைய சர்வே எண்.381/1பகுதி, சர்வே எண்.76, வார்டு எண்.1, பிளாக் எண்.29 இல் அடங்கிய 'A.P.N. நகர்', என்ற பெயரில் உள்ள மனைப்பிரிவு மனை எண்.55A பரப்பளவு 1,420சதுர அடி விஸ்தீரணம் மற்றும் மனை எண்.55B பரப்பளவு 1,420சதுர அடி விஸ்தீரணம், மொத்தப் பரப்பளவு 2,840சதுர அடியில் பிரிக்கப்படாத பங்கு 290சதுர அடி நிலம் அதனுடன் 'VGK ISHANI' என்ற பெயரில் உள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் பரப்பளவு 620சதுர அடி கட்டிடப்பரப்பு கொண்ட R.C.C. மேற்தளங்கொண்ட கட்டிடம் குடியிருப்பு ஃப்ளாட் எண்.F1 அதன் அனைத்து வசதிகள் உட்பட, அதனுடன் மின்சார சேவை இணைப்பு, கார் நிறுத்தம், கிரில், தண்ணீர், கழிவுநீர்வடிகால்வாய் மற்றும் பொதுப்பரப்பு உட்பட அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, சென்னை - 600 008, C.M.D.A. உறுப்பினர் செயலாளர் / தாம்பரம் நகராட்சி, ஆணையரின் 04/08/2017 தேதியிட்ட துணைப்பிரிவு திட்ட அனுமதி P. A. எண்.52/17,P.P.L. எண்.293/17 . சென்னை - 600 008, C.M.D.A. உறுப்பினர் செயலாளர் / தாம்பரம் நகராட்சி, ஆணையரின் 31.8.2017 தேதியிட்ட கட்டிடத்திட்ட அனுமதி மனை எண்.55A, P. P. A. எண்.299/2017, P. P. L. எண்.312/2017 மற்றும் தாம்பரம் நகராட்சி, ஆணையரின் 31.08.2017 தேதியிட்ட Ka. Ma எண்.299/2017, Ka.Aa. எண்.312/2017, சென்னை - 600 008, C.M.D.A. உறுப்பினர் செயலாளர் / தாம்பரம் நகராட்சி, ஆணையரின் 31.8.2017 தேதியிட்ட கட்டிடத்திட்ட அனுமதி மனை எண்.55B.P.P.A. எண்.300/2017,P.P.L. எண்.313/2017 மற்றும் தாம்பரம் நகராட்சி, ஆணையரின் 31.8.2017 தேதியிட்ட Ka.Ma. எண்.300/2017, Ka.Aa.எண்.313/2017. மனை எண். 55 இன் எல்லைகள் மற்றும் நாற்புறப்புகள்:- எல்லைகள்: வடக்கில்- 24 அடி சாலை, தெற்கில்- சர்வே எண்.381/2 இல் உள்ள காலி நிலம், கிழக்கில்- மனை எண்.56, மேற்கில்- மனை எண்.54. நாற்புறப்புகள்: வடபுறம்- 40அடி, தென்புறம்- 40அடி, கிழக்குபுறம்- 71அடி, மேற்குபுறம்- 71அடி. சொத்து வரி மதிப்பீடு எண் : 009/021/03365 மின்சார சேவை இணைப்பு எண் : 256-763-913 சொத்தின் முகவரி: 'VGK ISHANI ஃப்ளாட் எண்.F1, முதல் தளம், மனை எண்.55, APN நகர், கிழக்கு தாம்பரம், சேலையூர், சென்னை - 600 073. CERSAI: ASSET ID 200026589688

சுவாதீன நிலை: மெய்நிலை

குறைந்தபட்சகேட்பு விலை	டேவணித்தொகை	ஏல உயர்வுத்தொகை
₹ 31,60,000/-	₹ 3,16,000/-	₹ 25,000/-

சொத்துகளைப் பார்வையிடும் தேதி: 06.11.2026 நேரம் : காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை.

மின் ஏலத் தேதி & நேரம்: **11.11.2026** நேரம்: காலை 11 மணி முதல் மாலை 4 மணி வரை (தலா 10 நிமிடங்கள் கொண்ட கால நீட்டிப்புகள் தொடர்ந்து தரப்படும்).

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.

விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.baanknet.com/ கடன் வழங்கியவரான பாரத ஸ்டேட் வங்கியின் இணையதளமான www.sbi.co.in என்ற இணைப்பில் காணலாம்.

தேதி: 01.10.2026
இடம்: சென்னை

அதிகாரப்பூர்வ அலுவலர்,
பாரத ஸ்டேட் வங்கி, SARB - II , சென்னை

Canara Bank கனரா வங்கி
சென்னை சிறப்பு ARM கிளை (02361)

திருத்தம்

2002 ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதிச்சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச்சட்டத்தின் கீழ் **M/s. பாலார் பேப்பர் மில்ஸ் லிமிடெட் -ன்** சொத்து தொடர்பாக 02.10.2026 அன்று தினமணி நாளிதழில்களில் வெளியிடப்பட்ட **11.11.2026** அன்று நடைபெறுவதாக இருந்த 30.09.2026 தேதியிட்ட மின் ஏல விற்பனையில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்பில் சொத்து எண்.1 & 2 சேர்த்து கூட்டாக விற்கப்படும் ஆகையால் ஏல உயர்வு தொகையை சொத்து எண்.1 மற்றும் 2-க்கு ஒவ்வொன்றும் ரூ.1,00,000/- என்பதற்கு பதிலாக **கூட்டாக ரூ.10,00,000/-** என்று திருத்தி வாசிக்கவும் மற்றும் இந்த மின் ஏல விற்பனையில் குறிப்பிட்டுள்ள பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எந்த மாற்றமுமில்லை.

அங்கீகாரம் பெற்ற அதிகாரி,
கனரா வங்கி

பேங்க் ஆஃப் பரோடா
பிராந்திய அலுவலக ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை (ROSARB)
சென்னை ரூரல் ரீஜியன், எண்.123, மெஸ்ஸனைன் தளம், துகார் டவர்ஸ், RL சாலை, எழும்பூர், சென்னை-600 008.
Phone: 044-28885428, E-mail: sarcmt@bankofbaroda.bank.in; Web: www.bankofbaroda.bank.in

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A மின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)
2002-ம்ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் விதிகளின் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை விற்பனை செய்தல்

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் பாங்க் ஆஃப் பரோடா வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வ.எண்.1: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் திரு.அலெக்சாண்டர் M த/பெ மேரியோரோக், பிளாக் C பழைய எண்.5, புதிய எண்.9, வள்ளலார் தெரு, MMDA அரும்பாக்கம், சென்னை600 106. மேலும் ஒரு முகவரி: திரு.அலெக்சாண்டர் M த/பெ மேரியோரோக், பிளாட் எண்.33, ரேணுகா நகர், ஃபேஸ் 1, வெம்பேடு கிராமம், திருப்போரூர் வட்டம், சென்னை 603110.

மொத்த நிலுவைத் தொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ரூ.31,15,487.15/- மேலும் 30.09.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். சுவாதீனம் நிலை : மெய்நிலை

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தற்போது திருப்போரூர் வட்டம், வெம்பேடு கிராமத்தின் பழைய சர்வே எண்.29/7B, புதிய சர்வே எண்.29/7B1A1, பட்டா எண்.1152 DTCP அனுமதி எண். MA. VA./DY.DTCP(செ.மா) எண்.185(R)/2017, அவர்களால் அனுமதிக்கப்பட்ட, ரேணுகா நகர் என அறியப்பட்ட மனைபிரிவில், உள்ள பழைய கதவு எண்.101, புதிய கதவு எண்.30, மனை எண்.33, இன் விஸ்தீரணம் 600 சதுர அடி வீடு அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள், வடக்கில் மனை எண்.34, தெற்கில் 23 அடி சாலை, கிழக்கில் மனை எண்.32, மேற்கில் மனை எண்.175, நாற்புறப்புகள் வடக்கில் 20 அடி, தெற்கில் 20 அடி, கிழக்கில் 30 அடி, மேற்கில் 30 அடி. Latitude : 12.746804 N Longitude : 80.159658 E.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வு தொகை
₹ 24,30,000/-	₹ 2,43,000/-	₹ 25,000/-

வ.எண்.2: கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்களின் பெயர் & முகவரி: கடன்தாரர் திரு. தவாக்கல் முகமது, பிளாக் எண்.A1-301, மூன்றாம் தளம், பிரின்ஸ் கிராமம், ஃபேஸ் I எல்லையா தெரு, தண்டையார்பேட்டை, சென்னை 600 081. மேலும் ஒரு முகவரி: திரு. தவாக்கல் முகமது, பிளாட் எண்.E, இரண்டாவது தளம், மனை எண்.117, S.F. எண்.212/2 (பழைய) & 212/109 (புதிய), சாஸ்தா அபார்ட்மெண்ட், ராதா நகர், நந்திவரம் கிராமம், வண்டலூர் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் 603202.

மொத்த நிலுவைத் தொகை: 30.09.2026 அன்றுள்ளபடி ரூ.71,57,459.12/- மேலும் 30.09.2026 அன்று முதல் செலுத்த வேண்டிய வட்டி பிற கட்டணங்கள் மற்றும் சட்ட செலவினங்கள். சுவாதீனம் நிலை : ஆக்கபூர்வ

அசையா சொத்தின் விரிவான விவரங்கள்: அட்டவணை -A தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் கூடுவாஞ்சேரி சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம், எண்.6, நந்திவரம் கிராமத்தின் பழைய சர்வே எண்.212/2 பகுதி, பட்டா எண்.6386, இன் படி புதிய சர்வே எண்.212/109, இல் அடங்கிய ராதா நகர் என்ற மனைபிரிவின் மனை எண்.117 இன் விஸ்தீரணம் 2600 சதுர அடி சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி எல்லைகள், வடக்கில் மனை எண்.114, தெற்கில் சாலை, கிழக்கில் மனை எண்.118, மேற்கில் மனை எண்.116, நாற்புறப்புகள் கிழக்கு மேற்காக வடபுறம் 40 அடி, கிழக்கு மேற்காக தென்புறம் 40அடி 6 அங்குலங்கள், வடக்கு தெற்காக கிழக்குபுறம் 65 அடி வடக்கு தெற்காக மேற்குபுறம் 65 அடி, அனைத்தின் பரப்பளவு 2600 சதுர அடி (241.54 சதுர மீட்டர்) Latitude : 12.830326 N Longitude : 80.074263 E. அட்டவணை B. (பத்திரத்தின் படி உள்ள சொத்து) அட்டவணை A, 2600 சதுர அடி மொத்த விஸ்தீரணத்தின் பிரிக்கப்படாத பங்கு 366 சதுர அடி நிலம், அட்டவணை A, இல் கட்டப்பட்டுள்ள "SASTHA APARTMENT" என பெயரிடப்பட்ட கட்டிடத்தின் இரண்டாம் தளத்தின் 1160 சதுர அடி (பொதுப்பரப்பு உட்பட) பிளாட் எண்.E.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை	ஏல உயர்வு தொகை
₹ 67,91,400/-	₹ 6,79,140/-	₹ 25,000/-

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: 02.11.2026, மதியம் 01 மணி முதல் மாலை 5 மணி வரை

EMD தொகை செலுத்த கடைசி தேதி : 07-11-2026 அன்று பிற்பகல் 1.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பாக

மின் ஏல தேதி & நேரம் (வ.எண்.1 முதல் 2 வரை): **07.11.2026** அன்று மதியம் 2 மணி முதல் மாலை 6 மணி வரை. வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணையதளமான https://bankofbaroda.bank.in/e-auction & ஆன்லைன் விற்பனைக்கான https://baanknet.com. இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி: 044-28885428 என்னிலும் கைபேசி எண். 8940056367 ஆகிய எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

தேதி : வ.எண்.1 : 01.10.2026; வ.எண்.2 : 03.10.2026; இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

வரி விளம்பரம்

PUBLIC NOTICE

CHANGE OF NAME

பெயர் மாற்றம்

ஜெ. பிரசன்னா விக்னேஷ் மகன் பெயர் பி. அர்ஜ்ஜுனேஷ். (வயது 17) புதிய எண்.27, காந்தி சாலை, ஜெகன்னநாதன் நகர், அரும்பாக்கம், சென்னை-600016 என்ற முகவரியில் வசிக்கின்றோம் இனி அர்ஜ்ஜுனேஷ் பிரசன்னா என அழைக்கப்படுவார்.

ஜெ. பிரசன்னா விக்னேஷ்
தந்தை

CHANGE OF NAME

I, **KOPPALA RAAJITHA,** W/o. MEESALA VENKATA RAO, residing at 13E, Anicham Block, Central Revenue Quarters, Kathiravan Colony, Anna Nagar, Chennai-600040, Tamilnadu, have changed my name to **RAAJITHA MEESALA** after marriage vide affidavit dated 01/10/2026 (No. FG 662116, Notary K.S. SHANMUGAM).

CHANGE OF NAME

I, **S VIJAYA** (Existing Name of Mother as per NK) as the mother of No - 15422333M, Rank NK, Name : Rajasekar S, presently residing at Kandakadu (Vill), Gunduppalavadi (Post), Cuddalore (TK), Cuddalore (Dist), Tamilnadu (State), Pincode-607002 stating that I have changed my name from **S VIJAYA** to **VIJAYA**

CHANGE OF NAME

I, **G SOLAIYAPPAN** (Existing Name of Father as per NK) as the father of No - 15422333M, Rank NK, Name : Rajasekar S, presently residing at Kandakadu (Vill), Gunduppalavadi (Post), Cuddalore (TK), Cuddalore (Dist), Tamilnadu (State), Pincode-607002 stating that I have changed my name from **G SOLAIYAPPAN** to **SOLAIYAPPAN**

CHANGE OF NAME

I , No - 15422333M, Rank NK, Name : Rajasekar S, son of Solaiyappan, Unit : Military Hospital, Chennai (Present Unit) resident of Kandakadu (Vill), Gunduppalavadi (Post), Cuddalore (TK), Cuddalore (Dist), Tamilnadu (State), Pincode-607002 stating that I have changed my daughter name from **R AKSHITHA** to **AKSHITHA R**

CHANGE OF NAME

I Suganya Sree Ramadass whos native district is Theni, currently residing at, No.203, 2nd Floor, C Block, Ramapuram Village, Kiloy Road, Sriperumbudur Taluk, Kanchipuram DT. I hereby confirm and declare that the above mentioned name of my father as appearing in my Aadhar card (No: 3224-1071-3243) is the correct name.

Certified that I have complied with all other legal requirements in this connection.

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!